விண்ணப்பப் படிவத்தைப் பூரணப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

1. நட்சத்திரக் குறியீடுகளில் (⋆) காட்டப்பட்டுள்ள பகுதிகள் கட்டாயமாகப் பூரணப்படுத்தப்பட வேண்டும். மற்றைய பகுதிகளை தங்களுக்கு உரிய வகையில் பூரணப்படுத்த வேண்டும்.

2. **இதன்போது நீங்கள் உண்மைத் தகவல்களை உள்ளடக்க வேண்டும். பொய்யான தகவல்கள் உள்ளடக்கப்படுமாயின் நீண்ட காலத்திற்கு பரீட்சைக் கடமைகளிலிருந்து விலக்கப்படுவதற்கும் ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் காரணமாக அமையும்.**

3. விண்ணப்பப் படிவத்தில் எல்லாப் பகுதிகளையும் பூரணப்படுத்தி Submit button இனைக் Click செய்த பின்னர் தங்களது விண்ணப்பப் படிவத்தை PDF வடிவில் தரவிறக்கம் (Download) செய்துகொள்ள முடியும். அந்த விண்ணப்பப் படிவத்தின் வன்பிரதியொன்றை (Hard Copy) நீங்கள் பெற்றுக் கொள்ள வேண்டும்.

4. அவ் வன்பிரதியின் (Hard Copy) 11 (a) பகுதி (நேர அட்டவணை) கையெழுத்தினால் பூரணப்படுத்தப்பட்டு பாடசாலையின் அதிபரினாலும் பிரதி/உப அதிபரினாலும் சான்றுப்படுத்தப்பட வேண்டும். **(விண்ணப்பிக்கும் பாடங்களைக் கற்பிக்கும் மொழிகளை நேர அட்டவணையில் குறிப்பிடவும்)**

5. **புதிய** விண்ணப்பதாரிகள் தமது தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக உரிய கல்விச் சான்றிதழ்களின் (பாடங்களுடன் கூடிய / detailed transcript) சான்றுப்படுத்தப்பட்ட நிழற்பிரதிகளை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். **(அவ்வாறு அனுப்பாதவிடத்து மதிப்பீட்டுக் கடமைகளுக்குரிய விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும் என்பதை கவனத்திற் கொள்க.)**

6. **உரிய வகையில் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.**

7. உரிய பாடசாலை அதிபரினால் / நிறுவனத் தலைவரினால் **பகுதி 16** பூரணப்படுத்தப்பட்ட பின்னர் விண்ணப்பப்படிவம் 2021.02.03 ஆம் திகதிக்கு முன்னர் கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

   பரீட்சை ஆணையாளர் நாயகம்,
   பாடசாலைப் பரீட்சைகள் (மதிப்பீட்டு) கிளை,
   இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
   பெலவத்தை, பத்தரமுல்ல.

❖ உரிய விண்ணப்பப் படிவத்தின் பிரதியொன்றை தாங்கள் வைத்திருத்தல் முக்கியமானதாகும்.

8. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் “விடைத்தாள் பரீட்சகர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவம் - **G.C.E. O/L 2020”** எனக் குறிப்பிடல் வேண்டும்.

9. இவற்றுக்கு மேலதிகமாக விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் தொடர்பாகவும் தங்களது கவனத்தைச் செலுத்தவும்.

10. மேற்படி பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டு நிலையங்களை கீழே தரப்பட்டுள்ள நகரங்களில் நிறுவுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**மதிப்பீட்டு நிலையங்களை நிறுவுவதற்கு தீர்மானித்துள்ள நகர எண்களும் நகரங்களும்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01. கொழும்பு | 11. மதுகம | 21. வெலிமட | 31. நிக்கவரட்டிய | 41. கண்டி | 51. வவுனியா |
| 02. மகரகம | 12. நீர்கொழும்பு | 22. மகியங்கனை | 32. குளியாப்பிட்டிய | 42. மாத்தளை | 52. மன்னார் |
| 03. ஹோமாகம | 13 கம்பஹா | 23. அம்பலாங்கொட | 33. சிலாபம் | 43. தெல்தெனிய | 53. யாழ்ப்பாணம் |
| 04. பிலியந்தலை | 14. நிட்டம்புவ | 24. அல்பிட்டிய | 34. கெக்கிராவ | 44. நுவரெலியா | 54. நெல்லியடி |
| 05. மொறட்டுவ | 15. இரத்தினபுரி | 25. காலி | 35. அனுராதபுரம் | 45. ஹட்டன் | 55. கிளிநொச்சி |
| 06. ஹங்வல்ல | 16. பெல்மதுல்ல | 26. அக்குரெஸ்ஸ | 36. பொலன்னறுவை | 46. மொனராகலை | 56. புத்தளம் |
| 07. அவிசாவளை | 17. எம்பிலிப்பிட்டிய | 27. மாத்தறை | 37. திருகோணமலை | 47. அம்பாறை | 57. தம்புல்லை |
| 08. ஹொறண | 18. பலாங்கொட | 28. தங்கல்லை | 38. கேகாலை | 48. கல்முனை | 58. வெல்லவாய |
| 09. பாணந்துறை | 19. பண்டாரவளை | 29. ஹம்பாந்தோட்டை | 39. பேராதெனிய | 49. அக்கரைப்பற்று | |
| 10. களுத்துறை | 20. பதுளை | 30. குருநாகல் | 40. கம்பளை | 50. மட்டக்களப்பு | |

11. தங்களுக்கு மேலதிக விவரங்கள் தேவைப்படின் கீழே தரப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களுக்கு அழைக்கவும்.

| | | | |
|---|---|---|---|
| 011 2784037 - | புஷ்பா விஜேசூரிய - | பரீட்சை ஆணையாளர் | - பாடசாலைப் பரீட்சைகள் (மதிப்பீடு) |
| 011 2785633 - | L.G.S. சமரகோன் | - பிரதிப் பரீட்சை ஆணையாளர் | - பாடசாலைப் பரீட்சைகள் (மதிப்பீடு) |
| 011 2785662 - | A.R.K. பீரிஸ் | - பிரதிப் பரீட்சை ஆணையாளர் | - பாடசாலைப் பரீட்சைகள் (மதிப்பீடு) |
| 011 2785216 - | A. கிருஷ்ணகோபி | - பிரதிப் பரீட்சை ஆணையாளர் | - பாடசாலைப் பரீட்சைகள் (மதிப்பீடு) |
| 011 2785663 - | K.K. விஜயரத்ன | - உதவிப் பரீட்சை ஆணையாளர் | - பாடசாலைப் பரீட்சைகள் (மதிப்பீடு) |
| 011 2785644 - | K.G.C.J. பண்டார | - உதவிப் பரீட்சை ஆணையாளர் | - பாடசாலைப் பரீட்சைகள் (மதிப்பீடு) |

பாடசாலைப் பரீட்சைகள் (மதிப்பீட்டு) கிளை : 011 2785681, 011 2785231

பீ. சனத் பூஜித
பரீட்சை ஆணையாளர் நாயகம்